WEB COPY



IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

DATED : 05.03.2025

CORAM

THE HONOURABLE MR.JUSTICE **M.SUNDAR**
and
THE HONOURABLE MRS.JUSTICE **K.GOVINDARAJAN THILAKAVADI**

**W.P.No.6444 of 2025**

Muthu Mayilswami ... Petitioner

Vs.

1.The Additional Chief Secretary to Government,
Revenue and Disaster Management
Department, Chief Secretariat,
Fort St. George, Chennai – 600 009.

2.The Commissioner,
Land Administration,
Ezhilagam, Chepauk, Chennai – 600 005.

3.The District Collector,
Salem District, Salem – 636 001.

4.The Sub Collector,
Mettur – 636 401, Salem District.

5.The Tahsildar,
Mettur – 636 401, Salem District. ... Respondents



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



Writ Petition filed under Article 226 of The Constitution of India praying to issue a Writ of Mandamus directing the third respondent to consider the petitioner's representation dated 05.01.2024 and to pass appropriate orders to reclassify the land in Survey No.341/1 (Local Fund Road) in M.Kalipatti Village, Mettur Taluk of Salem District into Village Natham Land for the purpose of granting house site pattas to the petitioner and other displaced persons.

For Petitioner : Mr.P.Jagadeesan

For Respondents : Mr.M.S.Arasakumar,
Government Advocate

**ORDER**

[Order of the Court was made by **M.SUNDAR, J.**,]

Captioned main 'Writ Petition' (hereinafter 'WP' for the sake of brevity) pertains to a representation dated 05.01.2024 made by the writ petitioner seeking re-classification of lands qua Survey No.341/1 in M.Kalipatti Village, Mettur Taluk, Salem District and a scanned reproduction of this representation is as follows:



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



63

**ஏற்பளிப்பு அட்டையுடன் கூடிய பதிவு அஞ்சல்**

இடம்: எம்.காளிப்பட்டி கிராமம்,
நாள்: 05.01.2024.

அனுப்புதல்

**முத்து மயில்சாமி,**
புதூர் நான்கு ரோடு,
மேச்சேரி – குட்டப்பட்டி அஞ்,
மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம்,
அகு எண்:636 453,
(செல்பேசி: 944 371 6463)

பெறுதல்

**(1). அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள்,**
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

**(2). நில நிர்வாக ஆணையர் அவர்கள்,**
எழிலகம், சேப்பாக்கம், சென்னை – 600 005.

**(3). மாவட்ட ஆட்சித்தலைவர்அவர்கள்,** சேலம் – 636 001.

**(4). மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள்,** சேலம் – 636 001.

**(5). சார் ஆட்சியர் அவர்கள்,** மேட்டூர் – 636 401.

**(6). வட்டாட்சியர் அவர்கள்,** மேட்டூர் – 636 401.

ஐயா / அம்மா,

**பொருள்:** சேலம் மாவட்டம் – மேட்டூர் வட்டம் – எம்.காளிப்பட்டி கிராமம் – புல எண் 341/1, 1.94.0 ஹெக்டேர், லோக்கல் பண்ட் ரோடு என வகைபாடு கொண்ட புறம்போக்கு நிலத்தில் 0.81.0 ஹெக்டேர் (8100 சதுரமீட்டர்) பரப்பளவுடைய நிலத்தை உட்பிரிவு செய்து, தீர்வை ஏற்படாத தரிசு அல்லது கிராம நத்தம் என புதிய வகைபாடு ஏற்படுத்தி, நில வருவாய் ஆவணங்களில் பதிவு செய்யக் கோருதல் – தொடர்பாக.

**பார்வை:** அரசாணை (நிலை) எண்:35, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள்:19.01.2023.

******

(1). சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், எம்.காளிப்பட்டி கிராமம், புல எண் 341/1, 1.94.0 ஹெக்டேர், லோக்கல் பண்ட் ரோடு என வகைபாடு கொண்ட புறம்போக்கு நிலத்தில் 0.08.0 ஹெக்டேர் (800 சதுரமீட்டர்) பரப்பளவில் மட்டுமே மேச்சேரி – குட்டப்பட்டி லோக்கல் பண்ட் ரோடு அமைக்கப்பட்டுள்ளது.

(2). எம்.காளிப்பட்டி கிராமம், புல எண் 341/1, 1.94.0 ஹெக்டேர், லோக்கல் பண்ட் ரோடு என வகைபாடு கொண்ட புறம்போக்கு நிலத்தில் 0.08.0 ஹெக்டேர் (800 சதுரமீட்டர்) பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள மேச்சேரி – குட்டப்பட்டி லோக்கல் பண்ட் ரோட்டிற்கு தெற்கிலுள்ள 0.81.0 ஹெக்டேர் (8100 சதுரமீட்டர்) பரப்பளவு நிலத்தை சிஸ்கால் நிறுவனத்தின் தேனிரும்புத் திட்ட நில ஆர்ஜிதத்தால் குடியிருப்பு வீடுகளை இழந்த 21 குடும்பத்தினர்களுக்கு 12.05.1995 – ஆம் நாளன்று அப்போதைய மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்களால் 21 வீட்டுமனைகளாகப் பிரித்து, அவைகளை குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

(தபிபா)



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



64

//2//

(3). எம்.காளிப்பட்டி கிராமம், புல எண் 341/1, 1.94.0 ஹெக்டேர், லோக்கல் பண்ட் ரோடு என வகைபாடு கொண்ட புறம்போக்கு நிலத்தில் மேற்கூறியவாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டுமனைகளில் 12 குடும்பத்தினர்கள் 12 குடியிருப்பு வீடுகளையும், மற்ற குடும்பத்தினர் 10 குடியிருப்பு வீடுகளையும், ஆக மொத்தம் 22 குடியிருப்புகளைக் கட்டி, அவைகளில் 28 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வருகிறார்கள்.

(4). ஆகவே, எம்.காளிப்பட்டி கிராமம், புல எண் 341/1, 1.94.0 ஹெக்டேர், லோக்கல் பண்ட் ரோடு என வகைபாடு கொண்ட புறம்போக்கு நிலத்தில் 0.08.0 ஹெக்டேர் (800 சதுரமீட்டர்) பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள மேச்சேரி – குட்டப்பட்டி லோக்கல் பண்ட் ரோட்டிற்கு தெற்கில் 0.81.0 ஹெக்டேர் (8100 சதுரமீட்டர்) பரப்பளவு நிலத்தில் சிஸ்கால் நிறுவனத்தின் தேனிரும்புத் திட்ட நில ஆர்ஜிதத்தால் குடியிருப்பு வீடுகளை இழந்த குடும்பத்தினர்கள் மற்றும் இதர குடும்பத்தினர்கள் கட்டியுள்ள 22 குடியிருப்பு வீடுகளுக்கு குடியிருப்பு வீட்டுமனைப் பட்டா வழங்கும் பொருட்டு, எம்.காளிப்பட்டி கிராமம், புல எண் 341/1, 1.94.0 ஹெக்டேர், லோக்கல் பண்ட் ரோடு என வகைபாடு கொண்ட புறம்போக்கு நிலத்தில் 0.08.0 ஹெக்டேர் (800 சதுரமீட்டர்) பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள மேச்சேரி – குட்டப்பட்டி லோக்கல் பண்ட் ரோட்டிற்கு தெற்கில் 0.81.0 ஹெக்டேர் (8100 சதுரமீட்டர்) பரப்பளவு நிலத்தை பார்வையில் காணும் அரசாணையின்படி, அதன் அமைப்பின் அடிப்படையிலும், நீண்டகால மற்றும் தற்போதைய பயன்பாட்டின் அடிப்படையிலும் உட்பிரிவு செய்து, அந்த நிலத்தை தீர்வை ஏற்படாத தரிசு அல்லது கிராம நத்தம் என புதியதாக வகைபாடு ஏற்படுத்தி, நில வருவாய் ஆவணங்களில் பதிவு செய்ய தாங்கள் தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ளும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
[signature] 5/1/2024
(முத்து மயில்சாமி)

**இணைப்பு:** பார்வையில் காணும் அரசாணையின் நகல் மற்றும் வரைபடம் – 5 தாள்கள்

The above representation dated 05.01.2024 shall hereinafter be referred to as 'said representation'.




https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



2. Mr.P.Jagadeean, learned counsel on record for writ petitioner draws our attention to proceedings of R3 [District Collector, Salem] dated 10.05.2024 and submits that the said representation is under active consideration. This 10.05.2024 proceedings of R3 bears reference Na.Ka.791417/2023/K2 and a scanned reproduction of the same is as follows:



4

மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், சேலம் மாவட்டம், பிரட்ஸ் சாலை, சேலம் – 636 001.
OFFICE OF THE DISTRICT COLLECTOR, SALEM DISTRICT, BRETTS ROAD, SALEM – 636 001.

தொலைபேசி : 0427–2450301 Telephone : 0427–2450301
நிகரி : 0427–2450301 Fax : 0427–2450301
மின்அஞ்சல் : collrslm@nic.in Email : collrslm@nic.in

பெறுதல்

சார் ஆட்சியர்,
மேட்டூர்.

அம்மையீர்,

ந.க. 791417/2023/கே2 நாள்.10 .05.2024.

பொருள் சேலம் மாவட்டம் – மேட்டூர் வட்டம் – எம்.காளிப்பட்டி கிராமம் – ச.எண்.341/1 லோக்கல் பண்ட ரோடு என வகைபாடு கொண்டு புறம்போக்கு நிலத்தில் தீர்வை ஏற்படாத தரிசு என புதிய வகைபாடு ஏற்படுத்தி நில வருவாய் ஆவணங்களில் பதிவு செய்யக்கோரி திரு.முத்துமயில்சாமி மனு அளித்துள்ளது – தொடர்பாக.

பார்வை 1.நிலநிர்வாக ஆணையர் அலுவலக கடித ந.க.F-1/6501038/2024, நாள்.30.01.2024.
2.திரு.முத்துமயில்சாமி என்பவரது மனு நாள்.05.01.2024.

---------

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், எம்.காளிப்பட்டி கிராமம், ச.எண்.341/1 லோக்கல் பண்ட ரோடு என வகைபாடு கொண்டு புறம்போக்கு நிலத்தில் தீர்வை ஏற்படாத தரிசு என புதிய வகைபாடு ஏற்படுத்தி நில வருவாய் ஆவணங்களில் பதிவு செய்யக்கோரி திரு.முத்துமயில்சாமி என்பவர் மனு அளித்துள்ளார்.

எனவே பொருள் தொடர்பாக தலத்தணிக்கை மற்றும் விசாரணை மேற்கொண்டு அறிக்கை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஓம்/–இரா லட்சுமி,
மாவட்ட ஆட்சியரின் கூடுதல்
நேர்முக உதவியாளர் (நிலம்),
சேலம்.

//உண்மை நகல்//

தலைமை உதவியாளர் (கே) பிரிவு

10.5.24

3. Be that as it may, the writ petitioner has filed statutory revision under Section 10A of 'The Tamil Nadu Land Encroachment Act,



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



1905 (Tamil Nadu Act III of 1905)' {hereinafter 'said 1905 Act' for the sake of brevity}' qua land comprised in aforesaid Survey No.341/1, the statutory revision is dated 10.11.2023 and a scanned reproduction of the said revision and stay petition thereat are as follows:

A.8

நாள்:10.11.2023

**மாண்பிற்குரிய அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,**
**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை,**
**தலைமைச் செயலகம், சென்னை - 600 009 அவர்களின் முன்னால்**

**சீராய்வு மனு எண் : / 2023**

**முத்து மயில்சாமி,**
புதூர் நான்கு ரோடு,
மேச்சேரி – குட்டப்பட்டி அஞ்சல்,
மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம்,
அகு எண்:636 453,
(செல்பேசி: 944 371 6463) ------ **மனுதாரர்**

**--- இடையே ---**

**(1). மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்,**
சேலம் – 636 001.

**(2). வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்,**
மேட்டூர் – 636 401, சேலம் மாவட்டம்.

**(3). வட்டாட்சியர் அவர்கள்,**
மேட்டூர் – 636 401, சேலம் மாவட்டம். ------- **எதிர்மனுதாரர்கள்**

1995 – ஆம் ஆண்டில், சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், எம்.காளிப்பட்டி கிராமத்தில் மனுதாரரின் குடும்பத்திற்கு சொந்தமாக இருந்த 10 ஏக்கர் பட்டா நிலங்கள் மற்றும் அவைகளில் கட்டப்பட்டிருந்த 5 குடியிருப்பு வீடுகள் ஆகியவற்றை சிஸ்கால் நிறுவனத்தின் தேனிரும்புத் திட்டத்திற்காக தமிழ்நாடு அரசாங்கம் கையகப்படுத்திக் கொண்டதற்காக புதிய குடியிருப்பு வீடுகளை கட்டிக் கொள்ள அப்போதைய மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் மனிதாபிமான அடிப்படையில் எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்:341/1, 1.94.0 ஹெக்டேர், லோக்கல் பண்ட் ரோடு என வகைபாடு கொண்ட புறம்போக்கு நிலத்தில் மனுதாரருக்கும், அவரது பெற்றோர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட சுமார் 5 செண்ட் பரப்பளவுள்ள 2 வீட்டு மனைகளில் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு வீடுகளை அகற்ற தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் –1905, பிரிவு 7 மற்றும் பிரிவு 6 ஆகியவைகளின் கீழ் பொட்டனேரி வருவாய் ஆய்வாளர் மற்றும் மேட்டூர் வட்டாட்சியர் ஆகியோர்கள் வழங்கிய 24.08.2020 மற்றும் 26.11.2020 ஆகிய நாளிட்ட அறிவிப்புகளை ரத்து செய்யவும், சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் –1905, பிரிவு 10 –ன் கீழ் சமர்பிக்கப்பட்ட, 29.12.2020 – ஆம் நாளிட்ட மேல் முறையீடு மனுவை தள்ளுபடி செய்து, மேற்கூறிய குடியிருப்பு வீடுகளை மட்டும் அகற்ற பிறப்பித்துள்ள ந.க.எண்:15193/2021/கே2, நாள்:29.11.2022 உத்திரவினை ரத்து செய்யவும் மாண்பமை சென்னை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு எண்:33357/2022 – ன் மீதான 03.11.2023 – ஆம் நாளிட்ட தீர்ப்புரையின்படி தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் –1905, பிரிவு 10A –1 (C) –ன் கீழ் சீராய்வு மனு சமர்ப்பித்தல் தொடர்பாக.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



49

//2//

பார்வை:(1). அரசாணை எண்:197, தொழில் (எம்ஐஇ)துறை, நாள்:28.07.1994.

(2). அரசு முதன்மைச் செயலாளர், தொழில் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009 அவர்களின் கடிதம் எண்:33448/(எம்ஐஇ)/95–5, நாள்:29.12.1995.

(3). மாண்பமை சென்னை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு எண்: 20124/2013 –ன் மீதான 28.10.2013 –ஆம் நாளிட்ட தீர்ப்புரை.

(4). தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் – 1905, பிரிவு 7 –ன் கீழ் பொட்டனேரி வருவாய் ஆய்வாளர் அவர்கள் வழங்கிய 24.08.2020 – ஆம் நாளிட்ட அறிவிப்பு.

(5). தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் – 1905, பிரிவு 6 –ன் கீழ் மேட்டூர் வட்டாட்சியர் அவர்கள் வழங்கிய 26.11.2020 – ஆம் நாளிட்ட அறிவிப்பு.

(6). மாண்பமை சென்னை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு எண்:18575/2020 –ன் மீதான 10.12.2020 ஆம் நாளிட்ட தீர்ப்புரை.

(7). தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் – 1905, பிரிவு 10 –ன் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட 29.12.2020 – ஆம் நாளிட்ட மேல்முறையீடு மனுவின் பேரில் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பிறப்பித்துள்ள உத்தரவு ந.க.எண்:15193/2021/கே2, நாள்:29.11.2022.

(8). மாண்பமை சென்னை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு எண்:33357/2022 – ன் மீதான 03.11.2023 – ஆம் நாளிட்ட தீர்ப்புரை.

******

(1). பார்வை (1) – ல் காணும் அரசாணையின்படி, சதர்ன் அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தின் தேனிரும்புத் திட்டத்திற்காக ( SISCOL – Pig Iron Project) 1992 மற்றும் 1993 ஆகிய ஆண்டுகளில் தமிழ்நாடு அரசாங்கத்தால் எம்.காளிப்பட்டி கிராமத்தில் 318.55 ஏக்கர் பரப்பளவுடைய பட்டா நிலங்களை கையகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இந்த 318.55 ஏக்கர் பரப்பளவுடைய பட்டா நிலங்களுக்கு 1994 – ஆம் ஆண்டில் தனித்தாசில்தார், நிலம் எடுப்பு, தேனிரும்புத் திட்டம், மேட்டூர் அவர்களது முன்னிலையில் அவார்டு விசாரணை நடைபெற்றது.

(2). மேற்கூறிய நில ஆர்ஜித நடவடிக்கைகளை ஆட்சேபணை செய்து, எம்.காளிப்பட்டி கிராமத்தில் 318.55 ஏக்கர் பரப்பளவுடைய பட்டா நிலங்களின் அனைத்து உரிமையாளர்களும் மாண்பமை சென்னை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்த ரிட் மனுக்களின் மீது விசாரணை நடைபெற்று வந்ததால், நில உரிமையாளர்கள் அனைவரும் மேற்கூறிய அவார்டு விசாரணைக்கு ஆஜராகவில்லை.

(3). 1994 – ஆம் ஆண்டில் மேற்கூறிய நில ஆர்ஜித நடவடிக்கைகளை ஆட்சேபணை செய்து மாண்பமை சென்னை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக்கள் அனைத்தும் நில உரிமையாளர்களுக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டவுடன், தனித்தாசில்தார், நிலம் எடுப்பு, தேனிரும்புத் திட்டம், மேட்டூர் அவர்கள் எம்.காளிப்பட்டி கிராமத்தில் 318.55 ஏக்கர் பரப்பளவுடைய பட்டா நிலங்களுக்குரிய நஷ்ட ஈட்டுத் தொகையை சங்ககிரி சார்பு நீதி மன்றத்தில் செலுத்திவிட்டார்.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



50

//3//

(4). 1995 – ஆம் ஆண்டில், மேற்கூறிய 318.55 ஏக்கர் பரப்பளவுடைய பட்டா நிலங்களிலிருந்த நில உரிமையாளர்களை அவர்களது 204 குடியிருப்பு வீடுகளிலிருந்து உடனடியாக காலி செய்யும்படி மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்களது தலைமையிலான வருவாய் துறை மற்றும் காவல் துறை அதிகாரிகள் கட்டாயப்படுத்தினார்கள்.

(5). அப்போது அனைத்து நில உரிமையாளர்களும் புதியதாக குடியிருப்பு வீடுகள் கட்டி குடியேற, மாற்று இடங்களில் எங்களுக்கு வீட்டுமனை நிலங்கள் கிடைக்கவில்லை என்பதால், 318.55 ஏக்கர் பரப்பளவுடைய பட்டா நிலங்களில் கட்டப்பட்டிருந்த குடியிருப்பு வீடுகளிலிருந்து உடனடியாக காலி செய்ய முடியாது எனக் கூறினார்கள்.

(6). அதன்பிறகு, கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் நில உரிமையாளர்களால் கட்டப்பட்டிருந்த 204 குடியிருப்பு வீடுகளுக்குப் பதிலாக, புதியதாக மாற்று குடியிருப்பு வீடுகளைக் கட்டிக்கொள்ள, 12.05.1995 – ஆம் நாளன்று அப்போதைய மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்: 201/1 – பாதை, 210/4ஏ – மந்தைவெளி, 334/1 – மந்தைவெளி, 334/2 & 3 – பாதை, 334/4 – தரிசு, 341/1 – லோக்கல் பண்ட் ரோடு மற்றும் 341/2 – தரிசு ஆகிய புறம்போக்கு நிலங்களில் 204 வீட்டுமனைகளைப் பிரித்து, நில உரிமையாளர்களுக்கு சாதி, மதம், பொருளாதாரத்தில் மேம்பட்ட நிலை ஆகிய நிபந்தனைகள் எதுவுமின்றி, **மனிதாபிமான அடிப்படையில்,** குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்தார். எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்:210/4ஏ – மந்தைவெளி புறம்போக்கு நிலத்தில், அருள்மிகு காரப்பட்டி மாரியம்மன் கோயிலுக்கு விழாக்காலங்களில் மாவிளக்கு தட்டம் மற்றும் கரகம் ஆகியவற்றை கிராம பொதுமக்கள் எடுத்து செல்லும் வழியில் பிரித்து, ஒதுக்கீடு செய்யப்பட்ட 28 வீட்டுமனைகளை சிஸ்கால் நில ஆர்ஜிதத்தால் குடியிருப்பு வீடுகளை இழந்த 28 குடும்பத்தினர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

(7). எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்: 334/1, 2, 3 & 4 மற்றும் 341/1 & 2 ஆகிய புறம்போக்கு நிலங்கள் மிகவும் தாழ்வான பகுதியாகும். 25.07.1995 –ஆம் நாளன்று பெய்த கனமழையால், மேற்கூறிய புறம்போக்கு நிலங்களில் பிரித்து, ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டுமனைகளில் மழைநீர் தேங்கி நின்றது. இதை நேரடியாக பார்வையிட்ட அப்போதைய மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்: 334/1, 2, 3 & 4 மற்றும் 341/1 & 2 ஆகிய புறம்போக்கு நிலங்களில் மழைநீர் தேங்கி நிற்பதால், இந்த புறம்போக்கு நிலங்களில் பிரித்து, ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டுமனைகளுக்குப் பதிலாக ,அருகிலுள்ள குட்டப்பட்டி கிராமம், சர்வே எண்: 330 மற்றும் 333 ஆகிய புறம்போக்கு நிலங்களில் வீட்டுமனைகளைப் பிரித்து, ஒதுக்கீடு செய்யப்படும் என்று கூறினார். இதற்கு குட்டப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் அப்போதைய மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் சிஸ்கால் நில ஆர்ஜிதத்தால் வீடுகள் இழந்தக் குடும்பத்தினர்களுக்கு



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



51



குட்டப்பட்டி கிராமம், சர்வே எண்: 330 மற்றும் 333 ஆகிய புறம்போக்கு நிலங்களில் வீட்டுமனைகளைப் பிரித்து, ஒதுக்கீடு செய்வதற்கு கடும் ஆட்சேபணையை தெரிவித்ததுடன், குட்டப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த, குடியிருப்பு வீடுகள் இல்லாதவர்களுக்கு மட்டுமே குட்டப்பட்டி கிராமம், சர்வே எண்: 330 மற்றும் 333 ஆகிய புறம்போக்கு நிலங்களில் வீட்டுமனைகளைப் பிரித்து, ஒதுக்கீடு செய்யவேண்டும் என்கின்ற கோரிக்கையையும் தெரிவித்தார்கள். இதனால் சிஸ்கால் நில ஆர்ஜிதத்தால் குடியிருப்பு வீடுகளை இழந்தக் குடும்பத்தினர்களுக்கு குட்டப்பட்டி கிராமம், சர்வே எண்: 330 மற்றும் 333 ஆகிய புறம்போக்கு நிலங்களில் வீட்டுமனை எதுவும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

(8). அதன்பிறகு, எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்: 334/1, 2, 3 & 4 மற்றும் 341/1 & 2 ஆகிய புறம்போக்கு நிலங்களில் வீட்டுமனைகளை ஒதுக்கீடு பெற்ற குடும்பத்தினர்கள் அனைவரும் சிஸ்கால் நிர்வாகத்தின் உதவியுடன் எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்: 334/1, 2, 3 & 4 மற்றும் 341/1 & 2 ஆகிய புறம்போக்கு நிலங்களில் பிரித்து, ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டுமனைகளில் லாரிகள் மூலம் மண்ணைக் கொட்டி, அடிதளத்தை உயரப் படுத்தி, மழை நீர் செல்வதற்கான வாய்க்காலை அமைத்து, குடியிருப்பு வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியேறி கடந்த 28 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வருகிறார்கள்.

(9). எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்: 201/1, 210/4ஏ, 334/1,2, 3 & 4 மற்றும் 341/1 & 2 ஆகிய புறம்போக்கு நிலங்களில் பிரிக்கப்பட்ட வீட்டுமனைகளை ஒப்படைத்ததற்காக எந்தவொரு அத்தாட்சியையும் அப்போதைய மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் வீட்டுமனைகளை ஒதுக்கீடு பெற்ற எந்தவொரு நில உரிமையாளருக்கும் வழங்கவில்லை. மேற்கூறிய புறம்போக்கு நிலங்களை கிராம நத்தமாக மாற்றி, வீட்டுமனைகளை ஒதுக்கீடு பெற்ற அனைத்து குடும்பத்தினர்களுக்கும் விரைவில் வீட்டுமனைப்பட்டா வழங்கப்படும் என்று கூறினார்.

(10). மேற்கூறிய புறம்போக்கு நிலங்களில் பிரித்து, ஒதுக்கீடு செய்யப்பட்ட 204 வீட்டுமனைகளில் சிஸ்கால் நில ஆர்ஜிதத்தால் குடியிருப்பு வீடுகளை இழந்தக் குடும்பத்தினர்களில் 103 குடும்பத்தினர்கள் மட்டும் 103 குடியிருப்பு வீடுகளைக்கட்டி, அவைகளில் குடியேறி, கடந்த 28 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வருகிறார்கள். மற்ற குடும்பத்தினர்கள் குடியிருப்பு வீடுகள் கட்ட வருமானம் இல்லாமல் வாடகை வீடுகளிலும், உறவினர் வீடுகளிலும் வசித்து வருகிறார்கள்.

(11). ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டுமனைகளில் நில உரிமையாளர்கள் குடியிருப்பு வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியேறிய பிறகு, 318.55 ஏக்கர் பட்டா நிலங்களிலிருந்த 204 குடியிருப்பு வீடுகளை அப்போதைய மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் இடித்துவிட்டு, 318.55 ஏக்கர் பட்டா நிலங்களை கையகப்படுத்தி சிஸ்கால் நிர்வாகத்திடம் ஒப்படைத்துவிட்டார்.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



52

//5//

(12). எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்: 334/4 – தரிசு மற்றும் 341/2 – தரிசு ஆகிய புறம்போக்கு நிலங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டுமனைகளில் குடியிருப்பு வீடுகளைக் கட்டி, அவைகளில் வசிக்கின்ற 41 குடும்பத்தினர்களுக்கு மட்டும் ஒருமுறை வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் 15.11.2007 – ஆம் நாளிட்ட வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டது. ஆனால், எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்: 201/1 – பாதை, 210/4ஏ – மந்தைவெளி, 334/1 – மந்தைவெளி 334/2 & 3 – பாதை, மற்றும் 341/1 – லோக்கல் பண்ட் ரோடு புறம்போக்கு நிலங்களில் குடியிருப்பு வீடுகளை கட்டி, அவைகளில் 28 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வருகின்ற எந்தவொரு குடும்பத்தினருக்கும் இன்றைய நாள் வரை வீட்டுமனைப்பட்டா வழங்கப்படவில்லை.

(13). அதன்பிறகு, எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்: 334/4 – தரிசு, 341/1 – லோக்கல் பண்ட் ரோடு மற்றும் 341/2 – தரிசு ஆகிய புறம்போக்கு நிலங்களில் பிரித்து ஒதுக்கீடு செய்யப்பட்ட, வீட்டுமனைப்பட்டா வழங்கப்படாத 97 வீட்டுமனைகளுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரி, ரிட் மனு எண்: 20124/2013 மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த ரிட் மனு எண்: 20124/2013 –ன் மீதான 28.10.2013 –ஆம் நாளிட்ட தீர்ப்புரையின்படி, மேட்டூர் வட்டாட்சியர் அனுப்பிய அழைப்பாணை ந.க.10102 / 2014 / பி1, நாள்: 20.03.2015–ன் பேரில், மேற்கூறிய புறம்போக்கு நிலங்களில் குடியிருப்பு வீட்டுமனைகளை ஒதுக்கீடு பெற்ற 97 குடும்பத்தினர்களும் 10.04.2015 –ஆம் நாளன்று பொட்டனேரி வருவாய் ஆய்வாளர் முன்பு நேரில் ஆஜராகி வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரிய வாக்குமூலத்துடன், சிஸ்கால் தேனிரும்புத்திட்ட நில ஆர்ஜிதம் சம்பந்தமான ஆவணங்களையும் இணைத்து ஒப்படைத்தோம்.

(14). மேட்டூர் வட்டாட்சியர் அவர்களின் குறிப்பாணை ஒ.மு. 16638/2015/பி3, நாள்:13.01.2016–ன்படி, எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்: 334/4 மற்றும் 341/1 & 2 ஆகிய புறம்போக்கு நிலங்களில் குடியிருப்பு வீடுகள் கட்டி, அவைகளில் வசிக்கின்ற 35 குடும்பத்தினர்கள் வீட்டுமனைப்ட்டா வழங்கக் கோரி, 18.07.2016 –ஆம் நாளிட்ட மனுக்களை தனித்தனியாக மேட்டூர் சார் ஆட்சியர் அவர்களிடம் நேரடியாக சமர்பித்துள்ளார்கள். மேலும், 10.10.2020–ஆம் நாளிட்ட மனுக்களை தனித்தனியாக மேட்டூர் சார் ஆட்சியர் மற்றும் மேட்டூர் வட்டாட்சியர் ஆகியோர்களுக்கு தபால் மூலம் அனுப்பிவைத்துள்ளார்கள். அதன்பிறகு, பொட்டனேரி வருவாய் ஆய்வாளர் அவர்கள் எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்: 341/1 – லோக்கல் பண்ட் ரோடு புறம்போக்கு நிலத்தில் பிரிக்கப்பட்ட வீட்டுமனைகளை ஒதுக்கீடு பெற்ற சிஸ்கால் தேனிரும்புத் திட்ட நில ஆர்ஜிதத்தால் குடியிருப்பு வீடுகளை இழந்த 31 குடும்பத்தினர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்குவதற்கு, இந்த புறம்போக்கு நிலத்தை கிராம நத்தமாக நில மாறுதல் செய்வதற்கான 07.09.2019 – ஆம் நாளிட்ட முன்மொழிவுகளை மேட்டூர் வட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பிவைத்துள்ளார். இதன்படி எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்: 341/1 – லோக்கல் பண்ட், ரோடு புறம்போக்கு நிலத்தில் பிரிக்கப்பட்ட வீட்டுமனைகளை ஒதுக்கீடு பெற்ற சிஸ்கால் தேனிரும்புத் திட்ட நில ஆர்ஜிதத்தால் குடியிருப்பு வீடுகளை இழந்த 31 குடும்பத்தினர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்குவது நிலுவையில் உள்ளது.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



53

//6//

(15). எனது குடும்பத்தினர்களுக்கு எம்.காளிப்பட்டி கிராமத்தில் சொந்தமாக இருந்த, கீழ் கண்ட அட்டவணை– 1 –ல் குறிப்பிட்டுள்ள 10 ஏக்கர் பட்டா நிலங்களையும், பட்டா நிலங்களில் கட்டப்பட்டிருந்த 5 குடியிருப்பு வீடுகளையும் 1995 – ஆம் ஆண்டில் அப்போதைய மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் சிஸ்கால் நிறுவனத்தின் தேனிரும்புத் திட்டத்திற்காக கையகப்படுத்தி, சிஸ்கால் நிர்வாகத்திடம் ஒப்படைத்துவிட்டார்.

**அட்டவணை- 1**

| வ.எண் | நிலஉரிமையாளர்களின் பெயர் | கையகப்படுத்தப்பட்ட நிலங்களின் சர்வே எண் மற்றும் பரப்பளவு | கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் கட்டப்பட்டிருந்த வீடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | ருக்மணி க/பெ. முத்துக்கவுண்டர் | 298/2 – 0.35.0 | |
| 2 | மயில்சாமி த/பெ. முத்துக்கவுண்டர் | 299/8 – 0.15.5 | |
| 3 | தங்கவேல் த/பெ. முத்துக்கவுண்டர் | 300/2 – 1.24.0 | |
| 4 | தருமராஜன் த/பெ. முத்துக்கவுண்டர் | 301/5 – 1.41.0 | – 4 குடியிருப்பு வீடுகள் |
| 5 | கலைச்செல்வி த/பெ. முத்துக்கவுண்டர் | 315/1C –1.01.0 | – 1 குடியிருப்பு வீடு |
| **மொத்தம்** | | **10 ஏக்கர்** | **5 குடியிருப்பு வீடுகள்** |

(16). எனது குடும்பத்தினர்களும், எனது சகோதரர் குடும்பத்தினர்களும், எனது பெற்றோர்களும் மாற்று குடியிருப்பு வீடுகளைக் கட்டிக்கொள்ள கீழ்கண்ட அட்டவணை – 2 –ல் குறிப்பிட்டுள்ள, எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்: 334/4 – தரிசு (வீட்டுமனை எண்: 6, 8 & 18) மற்றும் 341/1 – லோக்கல் பண்ட் ரோடு (வீட்டுமனை எண்: 80 & 81) ஆகிய புறம்போக்கு நிலங்களில் 5 வீட்டுமனைகளை அப்போதைய மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் 12.05.1995 –ஆம் நாளன்று எனது குடும்பத்தினர்களின் சாதி, மதம், பொருளாதாரத்தில் மேம்பட்ட நிலை ஆகிய நிபந்தனைகள் எதுவுமின்றி, குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்தார்.

**அட்டவணை - 2**

| வ.எண் | ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டுமனையின் சர்வே எண் மற்றும் வீட்டுமனை எண் | வீட்டுமனை ஒதுக்கீடு பெற்ற நபரின் பெயர் | கட்டப்பட்டுள்ள வீட்டின் தன்மை | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | 334/4 – தரிசு, வீட்டு மனை எண்:6 | தருமராஜன் த/பெ. முத்துக்கவுண்டர் | தார்சு வீடு | வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது |
| 2 | 334/4 – தரிசு, வீட்டு மனை எண்:8 | முத்துவேல் த/பெ. தருமராஜன் | சிமெண்ட் அட்டை வீடு | - |
| 3 | 334/4 – தரிசு, வீட்டு மனை எண்:18 | தங்கவேல் த/பெ. முத்துக்கவுண்டர் | சிமெண்ட் அட்டை வீடு | வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது |
| 4 | 341/1 – லோக்கல் பண்ட் ரோடு, வீட்டு மனை எண்:80 | முத்து மயில்சாமி த/பெ. முத்துக்கவுண்டர் | தார்சு வீடு | - |
| 5 | 341/1 – லோக்கல் பண்ட் ரோடு, வீட்டு மனை எண்:81 | ருக்மணி க/பெ. முத்துக்கவுண்டர் | இரும்பு அட்டை வீடு | - |



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



54

//7//

(17). எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்: 341/1 – லோக்கல் பண்ட் ரோடு புறம்போக்கு நிலத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டுமனை எண்: 80 – ல் 1995 –ஆம் ஆண்டில் நான் ஒரு வில்லை வீட்டினைக் கட்டி, அதில் 1995 –ஆம் ஆண்டிலிருந்து எனது குடும்பத்தினர்களுடன் வசித்து வந்தேன் (கதவு எண்:9/115, மின் இணைப்பு எண்:840). எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்: 341/1 – லோக்கல் பண்ட் ரோடு புறம்போர்க்கு நிலத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டுமனை எண்: 81 – ல் 1995 –ஆம் ஆண்டில் எனது தாயார் ஒரு அட்டை வீட்டினைக் கட்டி, அதில் 1995 –ஆம் ஆண்டிலிருந்து வசித்து வருகிறார் (கதவு எண்:9/116, மின் இணைப்பு எண்:251).

(18). எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்: 341/1 – லோக்கல் பண்ட் ரோடு புறம்போக்கு நிலத்தில் எனது குடும்பத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டுமனை எண்: 80 – ல், 1995 –ஆம் ஆண்டில் நான் கட்டிய வில்லை வீட்டின் மரங்கள் கரையான்களால் அரிக்கப்பட்டு, பழுதடைந்து விட்டதால், எனது வில்லை வீட்டினை கடந்த 2020 – ஆம் ஆண்டில் தார்சு கட்டடமாக மாற்றி கட்டிக் கொண்டிருந்தபொழுது, எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்: 341/1 – லோக்கல் பண்ட் ரோடு புறம்போக்கு நிலத்தில் எனது குடும்பத்திற்கும், எனது பெற்றோர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டுமனைஎண்: 80 & 81 வீட்டுமனைகளிலுள்ள எனது குடும்பத்தினர்களும், எனது பெற்றோர்களு ம் வசித்து வருகின்ற 2 குடியிருப்பு வீடுகளுக்கு மட்டும் பொட்டனேரி வருவாய் ஆய்வாளர் அவர்கள் தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் – 1905, பிரிவு 7 –ன் கீழ் 24.08.2020 – ஆம் நாளிட்ட அறிவிப்பினை எனக்கு நேரடியாக வழங்கினார். அத்துடன், பொட்டனேரி வருவாய் ஆய்வாளர் எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்: 341/1 – லோக்கல் பண்ட் ரோடு புறம்போக்கு நிலத்தில் மேற்கூறியவாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டுமனை எண்: 80 – ல், பழுதடைந்த வில்லை வீட்டிற்குப் பதிலாக தார்சு கட்டடம் கட்டுவதற்கான கட்டுமரனப் பணிகளை தொடர்ந்து செய்யக்கூடாது என்றும் எனக்கு வாய்மொழியாக உத்தரவிட்டார். அதன்பிறகு, எனது குடியிருப்பு வீட்டிற்கான கட்டுமானப் பணிகள்ள நான் மேற்கொண்டு செய்யவில்லை. இதனால் எனது குடும்பத்தினர்களும், எனது பெற்றோர்களும் குடியிருப்பு வீடுகள் இல்லாமல் இரண்டாவது முறையாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம்.

(20). பொட்டனேரி வருவாய் ஆய்வாளர் அவர்கள் தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் – 1905; பிரிவு 7 –ன் கீழ் வழங்கிய 24.08.2020 – ஆம் நாளிட்ட அறிவிப்பிற்கு நான் சமர்ப்பித்துள்ள 25.08.2020 – ஆம் நாளிட்ட ஆட்சேபணைகளடங்கிய மனு மற்றும் மேட்டூர் வட்டாட்சியர் அவர்களது அழைப்பாணை ந.க.3194/2020/பி5, நாள்:28.08.2020 – ன் பேரில் சமர்ப்பித்துள்ள 02.09.2020–ஆம் நாளிட்ட கடிதம் ஆகியவைகளுடன் இணைக்கப்பட்ட, எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்:298/2, 299/8, 300/2, 301/5 மற்றும் 315/1சி ஆகியவைகளில் எனது குடும்பத்தினர்களுக்கு சொந்தமாக இருந்த, சிஸ்கால் நிறுவனத்திற்கு கையகப்படுத்தப்பட்ட 10 ஏக்கர் பட்டா நிலங்கள் மற்றும் அந்த நிலங்களில் கட்டப்பட்டிருந்த 5 குடியிருப்பு வீடுகள் ஆகியவைகளுக்கான ஆவணங்களையும்; கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் கட்டப்பட்டிருந்த 5 குடியிருப்பு வீடுகளுக்குப் பதிலாக



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



55

//8//

மாற்று குடியிருப்பு வீடுகளை கட்டிக் கொள்ள 12.05.1995 – ஆம் நாளன்று அப்போதைய மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்களால் எனது குடும்பத்தினர்களுக்கு எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்: 341/1 – லோக்கல் பண்ட் ரோடு புறம்போக்கு நிலத்தில் 2 வீட்டுமனைகளை (வீட்டுமனை எண்: 80 & 81) குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆவணங்களையும் மேட்டூர் வட்டாட்சியர் அவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், நான் பொருளாதாரத்தில் மேம்பட்ட நிலையில் உள்ளதாக குறிப்பிட்டுள்ள குறிப்பாணை (ந.க.3194/2020/பி5, நாள்:09.11.2020) மற்றும் எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்: 341/1 – லோக்கல் பண்ட் ரோடு புறம்போக்கு நிலத்தில் எனது குடும்பத்திற்கும், எனது பெற்றோர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டுமனைகளில் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு வீடுகளை மட்டும் அகற்ற தமிழ்நாடு ஆக்கிரமிப்புச் சட்டம் – 1905, பிரிவு 6 –ன் கீழ் 26.11.2020– ஆம் நாளிட்ட அறிவிப்பு ஆகியவற்றை எனக்கு 04.12.2020 –ஆம் நாளன்று வழங்கினார்.

(21). எனக்கு தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் – 1905, பிரிவு 7 –ன் கீழ் வழங்கப்பட்ட 24.08.2020– ஆம் நாளிட்ட அறிவிப்பு மற்றும் தமிழ்நாடு ஆக்கிரமிப்புச் சட்டம் – 1905, பிரிவு 6 – ன் கீழ் வழங்கப்பட்ட 26.11.2020 – ஆம் நாளிட்ட அறிவிப்பு ஆகியவைகளை ரத்து செய்யக் கோரி, மாண்பமை சென்னை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு எண்: 18575/2020 – ன் மீதான 10.12.2020 – ஆம் நாளிட்ட தீர்ப்புரையின்படி, தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் – 1905, பிரிவு 10 – ன் கீழ் 29.12.2020 – ஆம் நாளிட்ட மேல்முறையீடு மனுவை சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் சமர்பித்தேன். இந்த மேல்முயையீடு மனுவை சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தள்ளுபடி செய்தும், எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்: 341/1 – லோக்கல் பண்ட் ரோடு புறம்போக்கு நிலத்தில் எனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டுமனைகளில் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு வீடுகளை அகற்றவும் பிறப்பித்துள்ள ந.க.எண்:15193/2021/கே2, நாள்:29.11.2022 உத்திரவினை ரத்து செய்யக் கோரி, மாண்பமை சென்னை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு எண்: 33357/2022 – ன் மீதான 03.11.2023 – ஆம் நாளிட்ட தீர்ப்புரையின்படி, தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் –1905, பிரிவு 10A –1 (C) –ன் கீழ் இந்த சீராய்வு மனுவை தங்களிடம் பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

(21). சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பிறப்பித்துள்ள ந.க.எண்:15193/2021/கே2, நாள்:29.11.2022 உத்திரவில்

(அ). சிஸ்கால் நிறுவனத்தின் தேனிரும்புத் திட்டத்திற்கு கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு உரிய நஷ்ட ஈட்டுத் தொகையை மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாலும்,

(ஆ). மனுதாரர் பெயரில் எம்.காளிப்பட்டி கிராமம், பட்டா எண்:168, சர்வே எண்: 342/6 வீட்டுமனை நிலம் உள்ளதாலும்,

(இ). மனுதாரர் வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரும் புறம்போக்கு நிலம், அதாவது எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்:341/1, லோக்கல் பண்ட் ரோடு ஆட்சேபணையுள்ள புறம்போக்கு நிலம் என்பதாலும் தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் –1905, பிரிவு 10 –ன் கீழ் மனுதாரர் சமர்பித்த 29.12.2020 – ஆம் நாளிட்ட மேல்முறையீடு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.



https://www.mhc.tn.gov.in/judis

सत्यमेव जयते
WEB COPY



56

//9//

(22). சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பிறப்பித்துள்ள ந.க.எண்:15193/2021/கே2, நாள்:29.11.2022 உத்திரவில் குறிப்பிட்டுள்ள, மேற்கூறிய குற்றச்சாட்டுகளுக்கு எனது பதிலை பின்வருமாறு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(அ). சிஸ்கால் நிறுவனத்தின் தேனிரும்புத் திட்டத்திற்கு கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு உரிய நஷ்ட ஈட்டுத் தொகையை மனுதாரராகிய எனக்கும் மற்ற நில உரிமையாளர்களுக்கும் வழங்கப்பட்ட பிறகு, சிஸ்கால் நிறுவனத்தின் தேனிரும்புத் திட்ட நில ஆர்ஜிதத்தால் குடியிருப்பு வீடுகள் இழந்த 204 குடும்பத்தினர்களுக்கும் எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்: 201/1 – பாதை, 210/4ஏ – மந்தைவெளி, 334/1 – மந்தைவெளி, 334/2 & 3 – பாதை, 334/4 – தரிசு, 341/1 – லோக்கல் பண்ட் ரோடு மற்றும் 341/2 – தரிசு ஆகிய புறம்போக்கு நிலங்களில் வீட்டுமனைகளைப் பிரித்து, மனிதாபிமான அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது என்று பார்வை (2) – ல் காணும் அரசு முதன்மைச் செயலாளர், தொழில் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009 அவர்களின் கடிதம் எண்:33448/(எம்ஐஇ)/95–5, நாள்:29.12.199 – ல் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த கடிதத்தையும், வீட்டுமனைகளை ஒதுக்கீடு செய்தது சம்பந்தமான இதர ஆவணங்களையும் சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

(ஆ). எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்: 341/1 – லோக்கல் பண்ட் ரோடு புறம்போக்கு நிலத்தில் எனக்கும், எனது பெற்றோர்களுக்கும் வீட்டுமனைகளை 12.05.1995 – ஆம் நாளன்று அப்போதைய மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்களால் குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டுமனைகளில் குடியிருப்பு வீடுகளைக் கட்டி, அவைகளில் 1995 – ஆம் ஆண்டு முதல் எனது குடும்பத்தினர்களும், எனது பெற்றோர்களும் வசித்து வருகின்றோம். எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்: 341/1 – லோக்கல் பண்ட் ரோடு புறம்போக்கு நிலத்தில் எனக்கும், எனது பெற்றோர்களுக்கும் வீட்டுமனைகளை 12.05.1995 – ஆம் நாளன்று ஒதுக்கிய பிறகு, 3 ஆண்டுகள் கழித்துதான் 11.06.1998 – ஆம் நாளன்று எம். காளிப்பட்டி கிராமம், சர்வே எண்: 342/6, 0.01.0 ஹெக்டேர் (2½ சென்ட்) பரப்பளவுடைய, பட்டா எண்:168 வீட்டுமனையை விலைக்கு வாங்கியுள்ளேன்.

(இ). எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்:341/1, லோக்கல் பண்ட் ரோடு என வகைபாடு கொண்ட புறம்போக்கு நிலம் 1.94.0 ஹெக்டேர் (19,400 சதுர மீட்டர்) பரப்பளவுடையதாகும். இதில் லோக்கல் பண்ட் ரோடு என்கின்ற இதர மாவட்ட சாலை 0.08.0 ஹெக்டேர் (800 சதுர மீட்டர்) பரப்பளவில் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது. மற்ற பகுதி பல வருடங்களாக கீழ்கண்டவாறு நில அமைப்புகளை கொண்டுள்ளது. அரசாணை (நிலை) எண்:35, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள்:19.01.2023 –ன்படி,



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY





எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்:341/1, 1.94.0 ஹெக்டேர் பரப்பளவுடைய, லோக்கல் பண்ட் ரோடு என வகைபாடு கொண்ட புறம்போக்கு நிலத்தை கீழ்கண்டவாறு 4 உட்பிரிவுகளாகப் பிரித்து, பல வருடங்களாக உள்ள நில அமைப்பு மற்றும் தற்போதைய பயன்பாடு ஆகியவற்றை கணக்கிற்கொண்டு புதிய வகைபாடுகளை உருவாக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு 04.03.2023, 09.03.2023 மற்றும் 17.03.2023 ஆகிய நாளிட்ட மனுக்களை அனுப்பி வைத்துள்ளேன். அதன்படி, எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்:341/1, 1.94.0 ஹெக்டேர் பரப்பளவுடைய, லோக்கல் பண்ட் ரோடு புறம்போக்கு நிலம் மேற்கூறியவாறு 4 உட்பிரிவுகளாகப் பிரித்து, புதிய வகைபாடுகள் ஏற்படுத்தப்பட்டால், எனது குடியிருப்பு வீடுகளடங்கிய பகுதி, குடியிருப்பு பகுதியாக (கிராம நத்தமாக) வகைபாடு செய்யப்பட்டு, வீட்டு மனைப்பட்டா வழங்க ஆட்சேபணையற்ற நிலமாக மாறிவிடும். கடந்த காலங்களில் பல்வேறு நிகழ்வுகளில் பொதுக்காரியத்திற்காக ஆட்சேபணையுள்ள புறம்போக்கு நிலங்களை (நீர்நிலை புறம்போக்கு நிலங்களைத் தவிர) வருவாய் துறை ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களாக வகைபாடு மாற்றம் செய்துள்ளது. நீர்நிலை வகைபாடு கொண்ட புறம்போக்கு நிலங்களைத் தவிர, இதர ஆட்சேபணை புறம்போக்கு நிலங்களை வகைபாடு மாற்றம் செய்ய தடை ஏதுமில்லை.

| வ. எண் | புறம்போக்கு நிலத்தின் சர்வே எண், விஸ்தீரணம் மற்றும் வகைபாடு | நில அமைப்பு, பல வருடங்களாக மற்றும் தற்போதைய பயன்பாடு | | விஸ்தீரணம் (ஹெக்டேரில்) | விஸ்தீரணம் (சதுர மீட்டரில்) | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | சர்வே எண்:341/1, 1.94.0 ஹெக்டேர், லோக்கல் பண்ட் ரோடு | 341/1A | இதர மாவட்ட சாலை | 0.08.0 | 800 | - |
| | | 341/1B | குட்டை | 0.84.0 | 8,400 | - |
| | | 341/1C | குடியிருப்பு பகுதி (கிராம நத்தம்) | 0.82.0 | 8,200 | 21 குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன |
| | | 341/1D | கருப்புசுவாமி கோயில் | 0.20.0 | 2,000 | - |
| | | மொத்தம் | | **1.94.0** | **19,400** | - |

(ஈ). எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்:341/1, லோக்கல் பண்ட் ரோடு புறம்போக்கு நிலத்தில் எனது குடும்பத்திற்கும், எனது பெற்றோர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டுமனைகள் எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்:341/1, லோக்கல் பண்ட் ரோடு புறம்போக்கு நிலத்திலுள்ள குட்டை பகுதியில் தமிழ்நாடு நெடுஞ்சாலை துறையால் சங்ககிரி – எடப்பாடி – மேச்சேரி மாநில நெடுஞ்சாலை 40/8 கிமீ – ல் கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலத்திற்கு அமைக்கப்படவுள்ள அணுகு பாதையிலிருந்து 73 மீட்டர் தூர இடைவெளியில் அமைந்துள்ளது. இதற்கான வரைபடம் இம் மனுவுடன் இணைக்கப்பட்டுள்ளது.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



58

//11//

(23). எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்:341/1, லோக்கல் பண்ட் ரோடு புறம்போக்கு நிலத்தில் எனது குடும்பத்திற்கும், எனது பெற்றோர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டுமனைகளில் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு வீடுகளை தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் – 1905 –ன்படி அகற்றும் நடவடிக்கைகளுக்கு தகுதியான ஆவணங்களுடன் ஆட்சேபணை தெரிவித்து, சமர்பித்த 25.08.2020 – ஆம் நாளிட்ட மனுவை தள்ளுபடி செய்து, மேட்டூர் வட்டாட்சியர் அவர்கள் பிறப்பித்துள்ள குறிப்பாணை ந.க.3194/2020/பி5, நாள்:09.11.2020 மற்றும் தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் – 1905, பிரிவு 10 –ன்கீழ் சமர்பித்த 29.12.2022 – ஆம் நாளிட்ட மேல்முறையீடு மனுவை சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தள்ளுபடி செய்து, பிறப்பித்துள்ள உத்தரவு ந.க.எண்:15193/2021/கே2, நாள்:29.11.2022 கீழ்கண்ட தவறான மற்றும் சட்ட விரோதமான செயல்பாடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

(அ). எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்:298/2, 299/8, 300/2, 301/5 மற்றும் 315/1சி ஆகியவைகளில் எனது குடும்பத்தினர்களுக்கு சொந்தமாக இருந்த, சிஸ்கால் நிறுவனத்தின் தேனிரும்புத் திட்டத்திற்கு கையகப்படுத்தப்பட்ட 10 ஏக்கர் பட்டா நிலங்களின் ஆவணங்களையும், எம்.காளிப்பட்டி கிராமத்தில் சிஸ்கால் நிறுவனத்தின் தேனிரும்புத் திட்டத்திற்கு கையகப்படுத்தப்பட்ட 318.55 ஏக்கர் பட்டா நிலங்களில் கட்டப்பட்டிருந்த 204 குடியிருப்பு வீடுகளுக்குப் பதிலாக மாற்று குடியிருப்பு வீடுகளைக் கட்டிக்கொள்ள 12.05.1995 – ஆம் நாளன்று அப்போதைய மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்களால் எம்.காளிப்பட்டி கிராமத்திற்குட்பட்ட பல்வேறு புறம்போக்கு நிலங்களில் வீட்டுமனைகளைப் பிரித்து, ஒதுக்கீடு செய்ததற்கான ஆவணங்களையும், எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்:341/1, லோக்கல் பண்ட் ரோடு புறம்போக்கு நிலத்தில் எனது குடும்பத்திற்கும், எனது பெற்றோர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டுமனைகளுக்கு, வீட்டுமனைப்பட்டா வழங்குவதற்கான முன்மொழிவுகளையும் மேட்டூர் வட்டாட்சியர் மற்றும் சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளாமல், என்னை ஆக்கிரமிப்பாளராக கருதியுள்ளார்கள். இது தவறான செயலாகும்.

(ஆ). எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்:341/1, லோக்கல் பண்ட் ரோடு புறம்போக்கு நிலத்தில் எனது குடும்பத்திற்கும், எனது பெற்றோர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டுமனைகளுக்கு, வீட்டுமனைப்பட்டா வழங்குவத்தற்கான 07.09.2019 – ஆம் நாளிட்ட முன்மொழிவுகளை பொட்டனேரி வருவாய் ஆய்வாளர் அவர்கள் மேட்டூர் வட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பிய பிறகு, அதே பொட்டனேரி வருவாய் ஆய்வாளர் எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்:341/1, லோக்கல் பண்ட் ரோடு புறம்போக்கு நிலத்தில் எனது குடும்பத்திற்கும், எனது பெற்றோர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டுமனைகளில் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு வீடுகளை அகற்ற, தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் – 1905, பிரிவு 7 –ன் கீழ் எனக்கு 24.08.2020 – ஆம் நாளிட்ட அறிவிப்பு வழங்கியுள்ளார். இது சட்ட விரோதமான செயலாகும்.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



59



(இ). எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்:341/1, லோக்கல் பண்ட் ரோடு புறம்போக்கு நிலத்தில் சிஸ்கால் நிறுவனத்தின் தேனிரும்புத் திட்ட நில ஆர்ஜிதத்தால் குடியிருப்பு வீடுகளை இழந்த 21 குடும்பத்தினர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டுமனைகளில் கட்டப்பட்டுள்ள என்னைத் தவிர மற்ற 11 குடியிருப்பு வீட்டினர்களுக்கும், எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்:341/1, லோக்கல் பண்ட் ரோடு புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள 9 குடியிருப்பு வீட்டினர்களுக்கும் அவர்களது 20 குடியிருப்பு வீடுகளை அகற்ற பொட்டனேரி வருவாய் ஆய்வாளர் மற்றும் மேட்டூர் வட்டாட்சியர் தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் – 1905, பிரிவு 7 மற்றும் பிரிவு 6 ஆகியவைகளின் கீழ் அறிவிப்புகளை வழங்காமல், எனது குடியிருப்பு வீட்டை மட்டும் அகற்ற தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் – 1905, பிரிவு 7 மற்றும் பிரிவு 6 ஆகியவைகளின் கீழ் அவர்களது அதிகாரத்தை துஷ்பிரயோகம் (Abusing of Power) செய்து அறிவிப்புகளை வழங்கியுள்ளார்கள். இது சட்ட விரோதமாகும். மேலும், மேட்டூர் வட்டாட்சியர் மற்றும் பொட்டனேரி வருவாய் ஆய்வாளர் ஆகியோர்களின் செயல்பாடுகள் எனது குடியிருப்பு உரிமையை பறிப்பதாக உள்ளது.

(ஈ). சிஸ்கால் நிறுவனத்தின் தேனிரும்புத் திட்டத்திற்காக தமிழ்நாடு அரசாங்கம் எம்.காளிப்பட்டி கிராமத்தில் 318.55 ஏக்கர் பட்டா நிலங்களை 1995 – ஆம் ஆண்டில் கையகப்படுத்திய பொழுது, குடியிருப்பு வீடுகளை இழந்த குடும்பத்தினர்களை மறு குடியமர்வு செய்ய, அப்போதைய மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் மனிதாபிமான அடிப்படையில் எம்.காளிப்பட்டி கிராமத்தில் மேற்கூறிய பல்வேறு புறம்போக்கு நிலங்களை வீட்டுமனைகளாகப் பிரித்து, ஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகு, அடுத்து வரும் அரசு அதிகாரிகள் வீட்டுமனைகளை ஒதுக்கீடு பெற்ற குடும்பத்தினர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்காமல், அவர்கள் கட்டியுள்ள குடியிருப்பு வீடுகளை இடிப்பது சட்ட விரோதமாகும்.

(உ). தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் – 1905, பிரிவு 10 –ன்கீழ் சமர்பித்த 29.12.2022 – ஆம் நாளிட்ட எனது மேல்முறையீடு மனுவை சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தள்ளுபடி செய்து, பிறப்பித்துள்ள ந.க.எண்:15193/2021/கே2, நாள்:29.11.2022 உத்தரவு தங்களால் அல்லது நீதி மன்றத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டால், சேலம் மாவட்டத்திற்குட்பட்ட சிஸ்கால் தேனிரும்புத் தொழிற்சாலை, மேட்டூர் அனல் மின் நிலையம், சேலம் ஸ்டீல் பிளாண்ட், சேலம் – தமிழ்நாடு மேக்னசைட், சேலம் அரசினர் பொறியியல் கல்லூரி, சேலம் விமான நிலையம் ஆகியவைகளுக்கும், தமிழ்நாட்டிற்குட்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் பொதுக்காரியத்திற்காக என்கின்ற அடிப்படையில் பல்வேறு திட்டங்களுக்கும் கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு உரிய நஷ்ட ஈட்டுத்தொகையை வழங்கிய பிறகு, பட்டா நிலங்களை கையகப்படுத்திய பொழுது குடியிருப்பு வீடுகளை இழந்த குடும்பத்தினர்களுக்கு அரசு புறம்போக்கு நிலங்களில் மனிதாபிமான அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டுமனைகளில் குடியிருப்பு வீடுகளை இழந்த குடும்பத்தினர்களால் கட்டப்பட்டுள்ள



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



60



ஆயிரக்கணக்கிலான குடியிருப்பு வீடுகளை தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் – 1905 – ன்படி அகற்றப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். அவ்வாறு பல்வேறு திட்டங்களின் நில ஆர்ஜிதத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர்களின் குடியிருப்பு வீடுகள் அகற்றப்பட்டால், நிலமிழந்த குடும்பத்தினர்கள் இரண்டாவது முறையாக மீண்டும் பாதிக்கப்படுவார்கள்.

(24). ஆகவே, இந்த சீராய்வு மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களை தாங்கள் பார்வையிட்டு, 1995 – ஆம் ஆண்டில், சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், எம்.காளிப்பட்டி கிராமத்தில் எனது குடும்பத்தினர்களுக்கு சொந்தமாக இருந்த 10 ஏக்கர் பட்டா நிலங்கள் மற்றும் அவைகளில் கட்டப்பட்டிருந்த 5 குடியிருப்பு வீடுகள் ஆகியவற்றை சிஸ்கால் நிறுவனத்தின் தேனிரும்புத் திட்டத்திற்காக தமிழ்நாடு அரசாங்கம் கையகப்படுத்திக் கொண்டதற்காக மாற்று குடியிருப்பு வீடுகளை கட்டிக் கொள்ள 12.05.1995 – ஆம் நாளன்று அப்போதைய மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் மனிதாபிமான அடிப்படையில் எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்:341/1, 1.94.0 ஹெக்டேர், லோக்கல் பண்ட் ரோடு என வகைபாடு கொண்ட புறம்போக்கு நிலத்தில் எனக்கும், எனது பெற்றோர்களுக்கும் ஒதுக்கீடு செய்த சுமார் 5 செண்ட் பரப்பளவுள்ள 2 வீட்டுமனைகளில் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு வீடுகளை அகற்ற தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் –1905, பிரிவு 7 மற்றும் பிரிவு 6 ஆகியவைகளின் கீழ் பொட்டனேரி வருவாய் ஆய்வாளர் மற்றும் மேட்டூர் வட்டாட்சியர் ஆகியோர்கள் வழங்கிய 24.08.2020 மற்றும் 26.11.2020 ஆகிய நாளிட்ட அறிவிப்புகளையும், சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் –1905, பிரிவு 10 –ன் கீழ் சமர்பிக்கப்பட்ட, 29.12.2020 – ஆம் நாளிட்ட மேல் முறையீடு மனுவை தள்ளுபடி செய்து, மேற்கூறிய எனது குடியிருப்பு வீட்டை மட்டும் அகற்ற பிறப்பித்துள்ள ந.க.எண்:15193/2021/கே2, நாள்:29.11.2022 உத்திரவையும் தாங்கள் ரத்து செய்து, தகுந்த வகையில் உத்திரவு பிறப்பிக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

10/11/2023

(முத்து மயில்சாமி)
மனுதாரர்

இடம்: சென்னை – 9,
நாள்: 10.11.2023

**இணைப்பு:** (1). மாண்பமை சென்னை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு எண்:33357/2022 –ன் மீதான 03.11.2023 – ஆம் நாளிட்ட தீர்ப்புரையின் நகல் – 4 பக்கங்கள்.

(2). சம்பந்தப்பட்ட ஆவணங்களின் நகல் – 200 பக்கங்கள்.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



61

நாள்:10.11.2023

**மாண்பிற்குரிய அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,**
**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை,**
**தலைமைச் செயலகம், சென்னை - 600 009 அவர்களின் முன்னால்**

**சீராய்வு மனு எண் : / 2023**

**தடை உத்தரவு மனு எண் : / 2023**

**முத்து மயில்சாமி,**
புதூர் நான்கு ரோடு,
மேச்சேரி – குட்டப்பட்டி அஙி,
மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம்,
அகு எண்:636 453,
(செல்பேசி: 944 371 6463) ------ **மனுதாரர்**

--- இடையே ---

**(1). மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்,**
சேலம் – 636 001.

**(2). வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்,**
மேட்டூர் – 636 401, சேலம் மாவட்டம்.

**(3). வட்டாட்சியர் அவர்கள்,**
மேட்டூர் – 636 401, சேலம் மாவட்டம். ------ **எதிர்மனுதாரர்கள்**

தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் –1905, பிரிவு 10B –ன் கீழ் தடை உத்தரவு பிறப்பிக்கக் கோரும் மனு

******

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள, தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் –1905, பிரிவு 10A –1 (C) –ன் கீழ் தங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சீராய்வு மனுவில் குறிப்பிட்டுள்ளபடி, சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், எம்.காளிப்பட்டி கிராமம், சர்வே எண்:341/1, 1.94.0 ஹெக்டேர், லோக்கல் பண்ட் ரோடு என வகைபாடு கொண்ட புறம்போக்கு நிலத்தில் சுமார் 5 செண்ட் பரப்பளவில் மனுதாரரும், அவரது பெற்றோர்களும் கட்டியுள்ள குடியிருப்பு வீடுகளை அகற்ற தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் –1905, பிரிவு 7 மற்றும் பிரிவு 6 ஆகியவைகளின் கீழ் பொட்டனேரி வருவாய் ஆய்வாளர் மற்றும் மேட்டூர் வட்டாட்சியர் ஆகியோர்கள் வழங்கிய 24.08.2020 மற்றும் 26.11.2020 ஆகிய நாளிட்ட அறிவிப்புகள் மற்றும் சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் –1905, பிரிவு 10 –ன் கீழ் சமர்பிக்கப்பட்ட, 29.12.2020 – ஆம் நாளிட்ட மேல் முறையீடு மனுவை தள்ளுபடி செய்து, மேற்கூறிய குடியிருப்பு வீடுகளை அகற்ற பிறப்பித்துள்ள ந.க.எண்:15193/2021/கே2, நாள்:29.11.2022 உத்திரவு ஆகியவைகளுக்கு **தடை உத்தரவு** பிறப்பிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

10/11/2023
**(முத்து மயில்சாமி)**
**மனுதாரர்**

**இடம்:** சென்னை – 9,
**நாள்:** 10.11.2023
**இணைப்பு:** சீராய்வு மனு மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களின் நகல் – 207 பக்கங்கள்



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



62

**ACKNOWLEDGEMENT**

Received a cover/Parcel/Letter (Contents unknown) bearing No. ____

addressed to the Secretary to Government, Revenue and Disaster Management Department,

Secretariat,Chennai-09

From: Muthu Mayilswami,
Pudhoor 4 Road,
Mecheri - Guttapatti PO.
Mettur Tk, Salem Dt - 636453

Signature :

Designation :

Date :

தபால் பிரிவு
10 NOV 2023
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை
தலைமைச் செயலகம், சென்னை-600 009.

10.11.23

Revenue & Disaster Management
(Tappal) Department,
Secretariat,Chennai-09

Aforementioned 'statutory revision' shall be referred to as 'said revision' and said revision is pending with R1.

4. Issue notice.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



5. Mr.M.S.Arasakumar, learned Government Advocate accepts notice for all five respondents and submits that said revision and said representation are under active consideration of State.

6. Owing to the peculiar facts and circumstances of the case, we are of the considered view that it would be appropriate if R1 decides said revision as well as said representation. It is open to R1 to decide said revision by requisitioning a report from R3. We make it clear that said representation pertains to re-classification and therefore, we are not expressing any opinion or view on re-classification much less entitlement of the writ petitioner as learned State counsel submits that writ petitioner does not fall under the landless category and he has other lands. We express no opinion on this submission either and we leave open all questions.

7. Let the said revision and said representation be taken up by R1 and decided on its own merits and in accordance with law as expeditiously as the business of R1 would permit.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



8. Captioned WP is disposed of in the aforesaid manner. There shall be no order as to costs.

**(M.S.,J.)** **(K.G.T.,J.)**
05.03.2025

Index : Yes / No
Neutral Citation : Yes / No
mmi

To

1.The Additional Chief Secretary to Government,
Revenue and Disaster Management
Department, Chief Secretariat,
Fort St. George, Chennai – 600 009.

2.The Commissioner,
Land Administration,
Ezhilagam, Chepauk, Chennai – 600 005.

3.The District Collector,
Salem District, Salem – 636 001.

4.The Sub Collector,
Mettur – 636 401, Salem District.

5.The Tahsildar,
Mettur – 636 401, Salem District.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



**M.SUNDAR, J.,**
**and**
**K.GOVINDARAJAN THILAKAVADI, J.,**

mmi

**W.P.No.6444 of 2025**

**05.03.2025**



https://www.mhc.tn.gov.in/judis